# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


"மதத்திற்காக மனிதர்கள் வாதாடுவார்கள்; அதற்காக எழுதுவார்கள்; அதற்காகப் போராடுவார்கள்; அதற்காக உயிரை விடுவார்கள் — அதற்காக வாழ்வதைத்தவிர மற்ற எது வேண்டுமானுலும் செய்வார்கள்."

— கோல்ப்டன்


95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 31-ம் இல.


## பிரபுக்கள் சபையிலே கருதினல் ஸ்தானம் வகிப்பாரா?

பிரித்தானியதேச ஆட்சி மன்றங்களில் ஒன்ருன பிரபுக்கள் சபையிலே ஸ்கொத்திலாந்து சுதந்திர கிறிஸ்தவ சபையின் தலைவரான மிதவாதியோடும், மெதடிஸ்ற் சபையில் முதன்மைவாய்ந்த கனம். சோபர்பிரபுவோடும் ஒருங்கே ஓர் ஆசனத்தை வகிக்குமாறு லண்டன் நகர் வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஹீனன் ஆண்டகையும் ஏன் அழைக்கப்படக் கூடாதென்று கேட்டு கிறூன்ற்செஸ்றர் பிரபு அவர்கள் பிரபுக்கள் சபையிலே ஒரு பிரேரணையைக் கொண்டுவரப்போவதாக அறிவித்தல் கொடுத்திருக்கின்ருர்.

76 வயதுடையவரான இவர் ஒரு பரிஸ்றர். சின்னப்ப பாப்பரசரின் உற்ற சிநேகிதர் அங்கிளிக்கன் சபைக் கிறிஸ்தவர். மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் கருதினல் ஹீனன் ஆண்டகையை ஏற்கனவே சந்தித்து இந்தக் கருத்தை அவருக்குத் தெரிவிக்கவே அவரும் அதை ஒப்புக் கொண்டிருக்கிருர்.

இங்கிலாந்துச் சபை இனிமேலும் தொடர்ந்து ஸ்தாபிக்கப் பட்ட சபையாய் இருந்துவர வேண்டுமா என்பது பற்றி ஆலோசனை செய்வதற்கு காலம் வந்துவிட்டதெனத் தெரிவித்துப் பிரபுக்கள் சபையில் மற்றும் பிரேரணையையும் இவர் கொண்டு வரவிருக்கின்ருர். மேலும் அங்கிளிக்கன் சபை ஸ்தாபிக்கப்பட்ட சபை என்பதை இல்லாமற்செய்துவிடுவதற்கும், அதன் நாமமாத்திரையான அரச தலைமைப் பதவியை அகற்றிவிடுவதற்கும் பிரபுக்கள் சபையின் அரச பரிபாலகர் அரசி என்பதை ஒழித்துவிடுவதற்குமான மசோதா ஒன்றை அச்சபையில் கொண்டுவருவதற்கும் இவர் திட்டமிடுகின்ருர்.

## கருதினல் கில்ரோய்
### ஓய்வுபெறப்போகின்ருர்

அவுஸ்திரேலிய கண்டக் கருதினல் கில்ரோய் அடிகளே அத்தேசத்தில் முதன்முதலாகக் கருதினலாக நியமிக்கப்பட்டவர். இவர் தமக்கு 75 வயதுநிறைந்தவுடன் தம் கடமைகளிலிருந்து நீங்கி ஓய்வுபெற முடிவு செய்திருக்கின்ருர். இவருக்கு இப்போது வயது 74. கருதினல் கில்ரோய் அடிகளார் நமது நாட்டுக்குப் பல தருணங்களிலும் சமுகம் அளித்துள்ளவர்.

## பைபிள் நூலும் இன்றைய கத்தோலிக்கரும்

இற்றைக்கு ஒரு வருடத்துக்குமுன் நிறுவப்பட்ட உலக கத்தோலிக்க பைபிள் சங்கத்தின் முதற் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட வியன்னு நகர கருதினல் கொனிக் அடிகளார் இக்காலத்திலே கத்தோலிக்கர்கள் பைபிள் நூலுக்கு அளித்துவரும் மதிப்பு மிகவும் திருப்திகரமாயிருக்கின்றது என்று வருடாந்த கூட்டத்தில் எடுத்துக்காட்டினுர். நாலு நூற்ருண்டுகளுக்கு முன் பைபிளைப் பலரும் பல வகையாக விளங்கிக் கொண்டதனுலேயே கத்தோலிக்கர் தமது விசுவாசத்துக்கு அதைப் பயன்படுத்தாது குருமார் அளித்துவந்த போதனைகளிலும், விளக்கங்களிலும் அதிகம் சார்ந்து ஒழுகிக் கொண்டனரென்றும், குருமாரின் போதனையுடன் பைபிள் நூல் வாசிப்பையும் ஒருங்குகூடி மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி வருகின்றனர் என்றும் கூறினுர்.

### அவுஸ்திரேலியாவில் கிறிஸ்தவ சபைகளின்
## ஒருமித்த வரவேற்பு

பரிசுத்ததந்தை இவ்வருட இறுதியில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யும் போது அங்குள்ள பல கிறிஸ்தவ சபைகளும் கத்தோலிக்கருடன் ஒன்றுசேர்ந்து அவருக்கு வரவேற்பு அளிக்கத் தமக்குள்ள விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றனர், வரவேற்புக்குப் பொறுப்பான கத்தோலிக்க அதிகாரிகள் நன்றியுடன் இவ் விண்ணப்பத்தை ஏற்று ஆலோசித்து வருகின்றனர்.

## இளம் கிறிஸ்தவ தொழிலாளர்களே
### இன்றைய திருச்சபையின் அப்போஸ்தலர்

சென்றவாரம் பெல்ஜிய தேசத்தைச்சேர்ந்த சுமார் 800 இளம் கிறிஸ்தவ தொழிலாளர்கள் பரிசுத்த தந்தையை பேட்டிகாணச் சென்றிருந்தனர், அவர்களைப்பார்த்த பரி. தந்தை 6-வது சின்னப்பர் அன்புடன் அவர்களை விழித்து: இளம் கிறீஸ்தவ தொழிலாளர்களே! நீங்கள் இன்றைய திருச்சபையின் அப்போஸ்தலர்கள் எனக்கூறி "நீங்களே கிறிஸ்துநாதரின் சாயல்கள்; நீங்கள் ஒவ்வொருவரும் அவரை உலகுக்கு எடுத்துக்காண்பிக்கவேண்டும்; நீங்கள் பலவகைத் தொழில்கள் செய்பவராயினும் யேசுக்கிறிஸ்துநாதரின் உத்தானத்தின் சாட்சிகள் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்" என்ருர்.

### திவ்வியபூசை கண்ட
## பௌத்த மாணவர்கள்

இங்கிலாந்திலே கெஸ்விக் நகரிலுள்ள வாவிகளின் மாதாகோவிலில் அன்று ஞாயிற்றுக்கிழமை பூசைகாணச் சென்ற பக்தர்கள் பேராச்சரியமுற்ருர்கள். காரணம், ஜப்பானிய மாணவர்கள் கோஷ்டிஒன்று பளபளப்பான வர்ணமுள்ள "கிமோனஸ்" என்ற ஜப்பானிய தேதேசிய உடையணிந்தவர்களாய் அங்குபோய்ச் சேர்ந்தமையே. இந்த மாணவர்களில்ஒருவர்மட்டுமே கத்தோலிக்கர். ஏனையோரெல்லாம் பௌத்தர்கள். இவர்களெல்லாம் ஆங்கிலத்தில் அங்கு நிறைவேறிய திவ்வியபூசையைச் சரிவரப்பின்தொடர்ந்ததோடு செபங்களிலும், சங்கீதங்களிலும் கலந்துகொண்டார்கள். இவர்கள் ஜப்பானிலே நாகோயா நகரிலுள்ள நான்சன் சர்வகலாசாலையில் படித்துவருகிறவர்கள். ஐரோப்பிய நாடுகளிலே கல்விசம்பந்தமான சுற்றுப்பிரயாணம் செய்கின்ருர்கள். வண அல்போன்ஸ்ஹொட்ஸ் சுவாமியாரின் தலைமையிலே தங்கள் பிரயாணத்தைநடத்தி ரோமைநகரிலே தங்கியிருந்தபோது பாப்பரசரது பேட்டியும் பெற்றுக்கொண்டார்கள்.

## பாப்பரசர்அளித்த ஒரு பேட்டியில் ஏற்பட்ட பரபரப்பு

சென்றமாதம் பரி. தந்தை தமது கோடைகால வாசஸ்தலமாகிய கஸ்ரெல் கன்டெல்போவில் வசித்துவந்தபோது அளித்த ஒரு பெரும் பேட்டியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. காரணம் எதுவோவெனில், பரி. தந்தையை மண்டபத்துள் ஆசனத்திலே ஏற்றிவந்தசமயம் அவரைக் கிட்ட நின்று பார்ப்பதற்காகப் பலர் நெருங்கிக் கொண்டதனுல் அங்கு இடப்பட்டிருந்த பலமுள்ள தூண்களால் செய்யப்பட்ட தடைதன்னும் போதிய பலமுள்ளதாக இருக்காததே. தடையாக இருந்த பலத்த பலகைகள் முறிந்ததும் நூற்றுக் கணக்கானேர் குப்புற விழவேண்டி ஏற்பட்டது. அதுவும் பாப்பரசரைக் காவிச் சென்ற ஆசனத்துக்கு மிக அருகிலேயே இது நடைபெற்றது. ஆனுல், ஒருவரும் பலத்த காயமோ, நோவோ அடையவில்லையென அதன்பின் பாப்பரசருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

மேற்றிராணிமாருக்கு அப்பகுதியில் நிலவிவரும் மூன்றும் உலகஇயக்கம் என்னும் ஒரு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

### ஆர்ஜன்ரீன் ஜனதிபதி மேற்றிராணிமாரின்
## உதவியைக்கேட்கிருர்

ஆர்ஜன்ரீன் தேசத்தில் அண்மையில் நிறுவப் பட்டிருக்கும் புதிய அரசாங்கமும் அதன் ஜனதிபதி லெவிங்ஸன் அவர்களும் அத்தேச

## இராசதந்திரியான கருதினல்

திருச்சபைக் கருதினல்மாருள் அதிக காலங்கண்ட இராசதந்திரியாய் — அதாவது அரசியல் நிபுணராய் விளங்கியிருந்த கருதினல் பிசார்தோ ஆண்டகை அன்று சனிக்கிழமை ரோமை நகரிலே தமது 93-வது வயதில் காலஞ்சென்ருரென செய்திகிடைத்திருக்கின்றது. இவர் 1922-ம் ஆண்டு றபல்லோ நகர் மகாநாட்டில் பரிசுத்தஸ்தானத்தின் பிரதிநிதியாகச் சமுகமளித்து, ருஷிய வெளிநாட்டு மந்திரியாயிருந்த லிற்விஞேமுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் சோவியத் இராட்சியத்திலே மக்கள் சுதந்திரமாகச் சமய வழிபாடு நடத்த அனுமதிக்கும் படியாய் அவரைத் தூண்டி நின்ருர்.

1929-ம் ஆண்டு இத்தாலிய சர்வாதிகாரியான சிங்ஞோர் முசோலினியுடன் லத்தறன் உடன்படிக்கை சம்பந்தமாய்ச் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்துவதில் இவர் பேருதவியாய் இருந்தார். ஜேர்மன் நாஸிகளுடனும் இவர் சமரச பேச்சு வார்த்தை நடத்தலாயினர். 1937-ம் ஆண்டு இவர் ஒரு கருதினல் ஆக்கப்பட்டார். கருதினல்மார் திருச்சங்கத்திலே இவருடன் நீண்டகாலம் இருகருதினல்மார் மட்டுமே பணியாற்றி யிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் 1929-ம் ஆண்டுகருதினல் ஆக்கப்பட்ட லிஸ்பன் நகர பத்திறியாகுவான செறெஜெய்ரு ஆண்டகையும், 1936-ம் ஆண்டுகருதினலாக்கப்பட்ட திசருன் ஆண்டகையுமே.

இவருடைய மரண செய்தியை அறியவந்ததும் பரி. தந்தை காஸ்ரெல் கான்டெல்போவிலுள்ள தமது வாசஸ்தலத்திலிருந்து ரோமைநகர் சென்று அவரின் மரணப்படுக்கையருகே முழந்தாட்படியிட்டுச் செபஞ் செய்தனர் அவருடைய உறவினரையும், ஆறுதலான வார்த்தை கூறித்தேற்றினுர். சமீபத்திலே ஓர் இத்தாலியரான கருதினல் பிசார்தோவின் மரணத்தாலே திருச்சபைக் கருதினல்மார் தொகை 131 பேராகக் குறைந்திருக்கின்றது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

● இறந்தவர்களின் உடலிலிருந்து பெயர்த்து எடுக்கப்படும் தோலை நெடுநாளைக்குப் பாதுகாத்து வைக்கமுடியுமென்றும், ஆனல், தோலைப் பெயர்த்தெடுப்பது ஒருவர் இறந்து ஆறு மணித்தியாலத்துள் நடைபெறவேண்டுமென்றும், முதுகிலும் தொடையிலுமிருந்து பெயர்த்தெடுக்கப்படும் தோலே ஒட்டுவேலைக்குப் பெரிதும் பயன்படுகிறதென்றும் தோல்பொருத்தும சத்திரவைத்தியத்தில் தேர்ந்த இந்தியரான டக்ரர் கேஷ்வானி கூறுகின்றார்.

● ஒரு கத்தோலிக்க நாடாகிய செக்கோசிலவக்கியாவிலே ருஷியா படையெடுத்த இரண்டாவது வருடாந்த தினம் இம்மாதம் 28ஆம் திகதி வருகின்றது. அதன் படையெடுப்பை எதிர்ப்பவர்கள் அங்குள்ள வர்த்தகஸ்தாபனங்கள், சினிமாக்காட்சிச் சாலைகள், புதினப்பத்திரிகைகள் ஆகியவற்றைப் பகிஷ்கரிக்கக் கோரும் துண்டுப்பிரசுரங்களை ஏற்கனவே அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய பிறேக் நகரில் பரப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

● கோவில்லாத பல்வைத்தியம் செய்வித்துக் கொள்வதற்கென்று லண்டன் நகரிலே "டிசிபாம்"என்ற ஒரு புதிய மருந்து கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருக்கிறது. இது ஒருவாது உணர்ச்சியையும், நோவை உணரும் தன்மையையும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு இல்லாமல் செய்துவிடும் சக்தி வாய்ந்தது ஆயினும் பல்வைத்தியர், சிகிச்சை அளிக்கும் போது ஒருவர் தனக்கு நடக்கும் சிகிச்சையை அறியும் உணர்ச்சி அவருக்கு இருக்குமாம்.

● சென்ற 22ஆம் திகதி இந்தியாவிலே பத்திரிநாதகோவிலுக்கு யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு போன 15பஸ்களும், 5ராக்ஸிகளும், மற்றும வாகனங்களும ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படவே அவற்றில் பிரயாணஞ்செய்த 600 பேரும் வெள்ளத்திற்குப் பலியாகிவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. வழியிலே கனத்தமழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்தமையே வெள்ளத்திற்குக் காரணமாகும்.

● வடு அதாவது தழும்பு இல்லாமல் செய்யும் சத்திர சிகிச்சை முறை ஒன்றை லண்டன்நகரிலே விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது, "டெக்சியன்"என்னும் ஓர் புதிய தையல்நூலை வழமையான நூலுக்குப் பதிலாகப் பயன்படுத்துவதே இம்முறையாகும். இது ஒரு செயற்கை நூலிழையாகும் சரீரத்தில் தையல் போடும் பொழுது இதனைப் பிரயோகிப்பதால தழும்பு ஏற்படாமல் போகிறது. இந்நூல் அதிகமாக ஆட்டின்குடல், தசைநாளங்களிலிருந்து இழைக்கப்படுகிறது.

● 'தேனீர்பருகி நீண்டகாலம் வாழுங்கள்'' என்ற சுலோகம் இன்று அமெரிக்காவில் பரந்துவருகின்றது. இருதய நோயாளருக்குத் தேநீர் நல்லதென்று அமெரிக்க வைத்திய ஆராய்ச்சியாளர் தங்கள் ஆராய்ச்சியிலே கண்டறிந்திருக்கின்றனர். அவர்களுடைய இந்த அபிப்பிராயத்தை இலங்கை டக்ரர்மார்பலரும ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

● ஜப்பானியரும், சீனர்களும் தேநீருடன் எலுமிச் சமபழச்சாற்றைக்கலந்து பருகுகின்றனர்; காப்பியைவிடத் தேநீர் வைத்தியரீதியில் அதிகம்பயனளிக்கிறது; தேநீரைப் பாலும், சீனியும் கலக்காமல் ஜப்பானிய, சீனமுறைப்படி எலுமிச்சம் பழச்சாற்றுடன் கலந்து பருகுவதால் கூடிய பலன் உண்டென்றும் வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

● ஐக்கிய அமெரிக்க தேசத்தில்வெளிவரும்" நியூயோக் போஸ்ற்''என்ற பிரபலபத்திரிகை உட்பட உலகிலுள்ள 346 பத்திரிகைகளுக்கு எழுதிவருகின்ற ஒரு குருட்டுப் பத்திரிகை எழுத்தாளரான திரு. விக்றர் றியேசெல் தனது மனைவியோடும், சகோதரி யேற்றுவோடும் தற்போது இலங்கை வந்திருக்கிறார். இங்கு தங்கியிருந்தபோது இவர் பிரதமரையும், மற்றும் சில பிரமுகர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

● பிரித்தானியிலே சிவசாஸ்திர ஆராய்ச்சிக்கும், கல்விச்சாலைகளிலே விஞ்ஞான பாடசெயற்கைப் பயிற்சிக்கும் தேவைப்படும பூச்சிகள் மிக அருந்தலாகிவிட்டன. அதனல் அங்குள்ள ஒரு லட்சம் பாடசாலைப் பிள்ளைகள் நீர்நிலையங்கள் பலவற்றிலும் தவளைக் குஞ்சுகளைப் பிடித்துப் பரக்க வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

● ஜப்பானில் தற்போது பெரும்பிரஸ்தாபமாக "எக்ஸ்போ''என்ற மாபெரும் பொருட்காட்சியிலே ஜப்பானிய பைபிள்களின் 21நாள் பொருட்காட்சி ஒன்றும் அதிலுள்ள கிறிஸ்தவ காட்சிமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. அந்நாட்டு பைபிள்சங்கமே இதை நடத்தியது, இதனை 2லட்சம்மக்கள் பார்வையிட்டுச் சென்றார்கள். பைபிள்பற்றிய 1லட்சத்து 20 ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் அதிலிருந்து பார்வையாளருக்கு வழங்கப்படலாயின.

● மத்திய கிழக்கிலே இசிறவேல்—அரபு நாடுகளுக்கிடையில் நடைபெற்றுவரும் சமாதானப்பேச்சுகளின் முன்னேற்றமும், சோவியற் ருஷியாவுக்கும் மேற்கு ஜேர்மனிக்குமிடையே ஏற்பட்டுள்ள அனாக்கிரமிப்பு உடன்படிக்கையும்திருப்தியளிப்பதாகவும், உலகபிரச்சனைகளைத் தீர்க்கும் நம்பிக்கை சர்வதேச வான மண்டலத்தில் தோற்றமும் பித்திருப்பதாகவும் தற்போது பிரான்சிலே பிறிஜன்கன் நகரில் தனது விடுமுறையைக் கழித்துவருகின்ற அத்தேச ஜனாதிபதி ஜோர்ஜேல் பொம்பிதோ கூறுகின்றார்.

● சர்வதேச நிலைமை திருத்த மடைந்துகொண்டு வரக்காணப்படுவதாலே 1970 ஆண்டின் ஆவணிமாதம் வருங்காலத்திலே ஞாபகப்படுத்தப்படவேண்டிய தென்றும், சகலபிரச்சனைகளும் சுமுகமாகத் தீர்க்கம்படுவதற்கு எவ்வளவோதூரம் இருந்தபோதிலும் அவைகள் எப்படியோ தீர்க்கப்படுமென்ற நம்பிக்கை உண்டாகத் தொடங்கியிருக்கிறதென்றும் பிரான்சிய ஜனாதிபதி அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்.

● ஜப்பானியதேச ஹிரோஷிமாநகரிலே அணுக்குண்டு வீசப்பட்ட 25ஆம் ஆண்டு நிறைவு ஞாபகதினம் இம்மாதம் 6ஆம் திகதி வியாழக்கிழமை வந்துபோயிற்று. அன்றுதினம் அணுக்குண்டால் இறந்தவர்களின் ஞாபகார்த்த "சமாதான பூங்கா'' விலே வருடாந்த ஞாபக பிரார்த்தனை நடைபெற்றது. இப்பூங்கா அந்நகரத்திலே அணுக்குண்டால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

● ஹிரோஷிமா நகரில் அணுக்குண்டு வீசப்பட்ட 25ஆம் ஆண்டு ஞாபகதினப் பிரார்த்தனைக்கு அந்நகர் மேயரான சென்சுட் யாமாடா தலைமைவகித்துப் பேசியபோது, உலகசமாதானத்துக்காகப் பரிந்துபேசியதன்மேல் 15,000 சமாதான மாடப்புறுக்கள் சிறகடித்து ஆகாயத்திலே பறந்துசென்றன. அங்கு திரண்டுநின்ற மக்களெல்லாம ஒரே குரலாய் "இனிமேல் இத்தகைய ஹிரோஷிமாக்கள் இல்லவேயில்லை'' என்ற கீதத்தைப் பாடினார்கள்.

● 1945ஆம் ஆண்டு ஆவணி மாதம 6ஆம திகதி ஹிரோஷிமாநகரில் அணுக்குண்டு வெடிக்கலாயிற்று. அதனல் இறந்தவர்கள் 2 வட்சம்பேர் என்று மதிப்பிடப்பட்டது. ஆனல், உத்தியோக பூர்வமான அறிக்கை 70 ஆயிரம் பேரெனத் தெரிவிக்கின்றது ஆனல், இன்னுமென அறியப்படாத 1 லட்சத்து 20 ஆயிரம் முதல் 1 லட்சத்து 30 ஆயிரம் பேரின் பிரேதங்கள் அங்குள்ள குன்றுபோலும் ஒரு பெரிய மண்மேட்டில் புதைக்கப்பட்டிருப்பதாக அந்நகர அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

● பிரான்ஸ் தேசத்தில் நோய்வாய்ப் பட்டிருக்கும் ஒருவர் தனது இல்லத்திலிருந்து கொண்டுதானே ரெலிவிஷனில ஞாயிற்றுக்கிழமைப் பூசையைக காணக்கூடியவராயிருக்கிறார். ஞாயிறுப் பூசைகண்டநண்பர் ஒருவரால் அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் கொண்டு வரப்படும் திவ்விய நன்மையைப் பெற்றுக்கொள்ளக் கூடியவராயும் இருக்கின்றார். பிரான்சிய மேற்றிராணிமார் செய்துள்ள புதுஒழுங்கு இதுவாகும்.

● நெடுந்தூரம்வரை ஊடுருவிப்பாய்ந்து தாக்கக்கூடிய புதுமாதிரியான ஏவாயுதம் ஒன்றை அமெரிக்கா கண்டுபிடித்துச் செய்து சென்ற 4 ஆம் திகதி அத்திலாந்திக் சமுத்திரத்திலே தண்ணீருக்கடியில் பரிசீலனை செய்து வெற்றி கண்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. அணு ஆயுதசாதனங்கள் பொருத்தப்பட்ட பலமுனைகளைக் கொண்ட இந்த ஏவாயுதம் இதற்குமுன் கண்டுபிடிக்கப்பட்டவைகளிலும் அதிகம சக்திவாய்ந்ததும், அதன்முனைகள் பல்வேறு இலக்குகளை நோக்கிப் பாயக்கூடியனவுமென்றும் சொல்லப்படுகிறது.

● அந்தகர்களுக்குப் பார்வை அளிப்பதற்காக இறந்தவர்களின் கண்களைத் தானஞ்செய்யும் வழக்கம் இலங்கையிலும், ஏனைய பலநாடுகளிலும் இயங்குவது தற்போது சகசமாகிவிட்டது. ஆனல், இறந்தவர்களின் தோல்தான இயக்கம் ஒன்று இப்பொழுது இந்தியாவிலே ஆரம்பமாகியிருக்கிறது. நெருப்பில் எரிந்து உருமாற்றம் அடைகிறவர்கள் அல்லது குஷ்டரோகத்தால் தோல் அழுகியவர்களுக்குப் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மூலம இறந்த ஒருவரின்தோல் ஒட்டப்படுகிறது.

---

## திருமதி அக்னேஸ் லோறன்சியார்

இவவுடைய நன்மரண முதலாம் வருட
ஞாபகமாக
21-8-70 வெள்ளிக்கிழமை காலை 6-00 மணிக்கு
சில்லாலை, கதிரைமாதா ஆலயத்தில் ஓர் திவ்விய
பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
தயைகூர்ந்து இப்பூசைப்பலியில் பங்குபற்றி
இவவின் ஆத்தும சாந்திக்காக மன்றுடுமாறு
கேட்டுக்கொள்ளுகிறோம்.

வண. பிதா லோறன்ஸ் சேவியர், O. M. I.
திரு. திருமதி. L. J. பெனடிக்ற்.
செல்வி. லோ. பிலோமினு.

சில்லாலை,
17-8-70.

---

## மரண ஞாபகம்

எனது அன்புக் கணவர்
**எஸ். என். சாமுவேல்**

தோற்றம்: 15—10—1893 மறைவு: 25—8—1960

ஆருயிர்க் கண்மணி (மகள்)
**மேரி பிலோமினு இராசாத்தியம்மா**

தோற்றம்: 22—6—1927 மறைவு: 29—8—1940

மண்ணுலகில் எனைப் பிரிந்து விண்ணுலகு எய்திய ஆவணி 25-ம், 29-ம் தினங்களில் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஒப்புக்கொடுக்கப்படும் திவ்விய பூசைப்பலியில் சிவியத்தில் அவர்களுக்கு அன்பு சொரிந்து நேசித்த உறவினர், அன்பர்கள், அனுதாபிகளே! உங்கள் நேசம் மறவாது புதுப்பித்து, அவர்களுக்காக யேசுவிடம் மன்றுடும்படி பரிவுடனும் தாழ்மையுடனும் கேட்டுநிற்கும்,

எமிலியா அன்னம்மா
சாமுவேல்.
(மனைவியும், தாயாரும்)

மிருசுவில் 99/70

---

## ஒரு பெரியாரின் மறைவு

மாளிபொட தோட்ட நிந்தகம டிவிசனில் ஏறக்குறைய 50 ஆண்டு காலமாக வசித்துவந்த தலைமைக் கங்காணியும், மாளிபொட அர்ச். அன்னம்மாள் தேவாலயத்தின் பிரதான மூலகர்த்தாவும், தோட்டக் கத்தோலிக்கரின் தலைவரும், கோவில் பரிபாலகரும்,கடவுளுக்காக தன் வாழ் நாளை அர்ப்பணித்தவருமான திரு. வி. ஜோசப் தலைமைக் கங்காணி அவர்கள் தமது பங்குக் குருவானவரான வணக்கத்துக்குரிய பிதா ஏ. ஸ்டேபனிசி,யே.ச, அவர்களுடன் ஒரு வாரமாக அளவளாவி தமது மக்களுக்கும் தமது முயற்சியால் மனந்திரும்பிய 300-க்கும் அதிகமான கத்தோலிக்கர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும் தாம் மரிக்குமுன் தமது முயற்சியால் கட்டப்பட்ட தேவாலயத்தின் கண்காணிப்புப் பற்றியும் தமது மரணம் சம்பவிக்கும் நாள்—திகதி—நேரம் ஆகியவற்றைக் குறித்தும் சகலருக்கும் தெளிவாக அறிவித்து, ஆறு வருடங்களுக்கு முன்னல் தாமே தமக்குக் கட்டிவைத்த சவக்குழியை முதல் தாமே சுத்தம்செய்து தமது நல்லடக்கத்திற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்யுமாறு தம் மக்களுக்குக் கட்டளையிட்டு தாம் மரிக்குமுன் தமது பங்குக் குருவானவர் தமதில்லத்தில் இருக்கும் பாக்கியம்பெற்று தினசரி திவ்விய நன்மை உட்கொண்டு தமது முயற்சியால் கட்டப்பட்ட தேவாலயத்தின் திருவிழாநாளாகிய 24-7-1970 வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு தமது முன்னறிவித்தலின்படியே பரம பிதாவின் பாதத்தில் தமது ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்தார். 25-7-70 சனிக்கிழமை மேற்படி தேவாலயத்தின் இறுதித் திருவிழாவன்று மாலை கோவில் கொடிமரத்தடியில் அன்னரது நல்லடக்கம் இனிதே நிறைவேறியது. வண பிதாக்களே! ஞானத் தாய்மார்களே!! சகல கிறிஸ்தவர்களே! நண்பர்களே! இவ்வாத்மாவின் நித்திய இளைப்பாற்றிக்காக பரம பிதாவிடம் வேண்டிக்கொள்ள பரிவுடன் வேண்டுகிறோம்.

—நிருபர்

---

## நேர்த்தியின் நிறைவு

உலகை மீட்கவந்த உத்தமர்க்குப் பாதையைச் செப்பனிடும் பணியிலே தன்னைப் பலியாக்கிய தவமுனி ஸ்நாபக அருளப்பரின் வேண்டுதலால் என் மகன் கொடிய சுரத்தில் இருந்து குணமடைந்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறி நேர்த்தியின்படி அறிக்கையிடுகிறேன்.

ய. யோ.
மன்னூர் [101|70]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்தவரும், இருக்கிறவரும், இனி வருபவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய சர்வேசுரன் பரிசுத்தர்! பரிசுத்தர்!! பரிசுத்தர்!!!

**(புனித அருளப்பர் காட்சி ஆக. 4-ம் அதி. 8-ம் வசனம்)**

வானதூதர்களாலும், புனிதர்களாலும் இடையருது விண்ணுலகில் சப்திக்கும் இதே வார்த்தைகளையே, பரிசுத்த சின்னப்பரும் எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில், "யேசுக்கிறீஸ்துநாதர் நேற்றும் இருந்தவர்; இன்றும் இருக்கிறவர் அவரே என்றும் இருப்பவர்;" என்று உண்மைத் தெய்வத்தின் வல்லபத்தை, பரிசுத்ததனத்தை, நித்தியத்துவத்தை விளக்கிக் காட்டுகிருர். அவ்வாறே ஒவ்வொரு அப்போஸ்தலரும் பரிசுத்த ஆவியானவர் அவரவருக்குக் கொடுத்த வரத்தின்படி யேசுநாதரைப்பற்றிச் சாட்சி பகர்ந்திருக்கின்றனர். இவ்வப்போஸ்தலர் அனைவரினும் அதிகமாக யேசுவை நேசித்து அன்பின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட புனித அருளப்பரோ, கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை விளக்க, அவரே ஒரேயொரு உண்மைத் தெய்வம் என்று சாட்சிபக, சுவிசேஷம், நிருபம் என்பவற்றை எழுதி, கிறிஸ்துவின் அன்பின் அழுத்தை உலகறிய வைத்ததுமன்றி, அவரது புனிதத்துவத்தின் உச்சநிலை, பரலோக காட்சிகளையும் அவர் காண வைத்தது.

அவர் பாத்மோஸ் என்னும் தீவில் இருந்தபோது, தாம் பரவசமானதையும், தமக்குக் கிடைத்த அதிசய காட்சிகளையும், காட்சி ஆகமமாக எழுதி வைத்திருக்கிருர். அவ்வாகமத்தில் எழுதிய விஷயங்கள் யாவும் தீர்க்கதரிசனங்களாக இருப்பதுமன்றி, அவற்றில் சில சம்பவங்கள் அப்போதே நடந்தனவாகவும், சில பிற்காலத்தில் நடந்தனவாகவும், இன்னுஞ்சில உலக முடிவில் நடக்கவிருப்பன வற்றை அறிவிக்கும் காட்சிகளாகவும் இருக்கின்றன. அத்துடன் இக் காட்சி ஆகமத்தில் குறிக்கப்பட்டபடி அறிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் யார் யார் மோட்சமகிமைக் குரியவர்கள், யார் யார் அவரை விட்டு விலகி, நித்திய நரகில் விழப்போகிறவர்கள் என்று மிகத் தெளிவாகக் காண்பிக்கிருர். இவற்றை நாம் தெளிவாக அறிந்தால்தான் நம் உண்மைச் சமயத்தில் ஸ்திரமாய் வாழ்வோம். இன்று வேதாகமத்தைத் தெளிவாக அறியாதபடியினுல்தான் கிறிஸ்தவர்கள் முதலாய் உத்தம கிறிஸ்தவ வாழ்வு வாழத் தெரியாதவர்களாகவும், உண்மைத் தெய்வமாம் கிறிஸ்துவுக்குச் சாட்சி கொடுக்க முடியாதவர்களாகவும் இருக்கிருர்கள். இப்படிப்பட்டோர் தேவனில் நம்பிக்கை யற்ருேராய் கோழைகளும், விசுவாசிகளும், அருவருப்புக்குரியவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரர், விக்கிரக ஆராதனைக்காரர், பொய்யர் ஆகி நரகம் என்னும் அக்கினித் தடாகத்தில் பங்கடைவதைத் நம் புனிதர் காட்சியிற் கண்டார்.

இவ்வப்போஸ்தலர் கிறிஸ்துவைப்பற்றி எப்படிச் சாட்சி கொடுத்து, தமது காட்சியை வெளிப்படுத்தினுர் என்ருல், (புனித அரு. காட்சி ஆக. 1ஆம் அதி. 5ஆம், 6ஆம் வச.) "கிறிஸ்துநாதர் உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதல் உயிர்த்தவரும், தமது இரத்தத்தினுலே நம்முடைய பாவங்களில் நின்று நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய சர்வேசுரனுக்கு முன்பாக, நம்மை இராஜாக்களும் குருக்களும் ஆக்கினுர்" என்று ஆரம்பிக்கிருர். அவர் தமதுகாட்சியில் முதன்முதல் யேசுநாதரையே தரிசிக்கிருர். அவரது முதற் சம்பாஷணை

— நாதன் —

ஆசியாவில் உள்ள ஏழு சபைகளையும்பற்றியதாய் இருந்தது. அச் சபைகள் மனந்திரும்பி, தபம் செய்யவேண்டும் என்றும், பல சமய வழிபாட்டை நீக்கி சத்திய மார்க்கத்தை கடைபிடிக்க வேணடும் என்பதுமே முக்கிய விஷயமாயிருந்தது. அன்றியும் தாம் நேசிக்கிறவர்களைக் கடிந்துகொள்ளுகிறேன் என்றும், "இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன். எவனுவது என் குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு வாசம்பண்ணுவேன். என்னேடு அவனும் வாசம்பண்ணுவான்" என்கிருர். அவரது காட்சியில் கிறிஸ்துவைக் கண்டதும் அவரது தெய்வப்பிரதாபத்தைப் பார்க்கமுடியாது அவருடைய பாதத்தில் விழுந்தேன்" என்றும், அப்போது அவர் தமது வலதுகரத்தை தமது தோள் மேல் வைத்து (புனித அரு. காட்சி ஆக. 1ஆம் அதி 17ஆம் 18ஆம் வச.) "பயப்படாதே; நானே ஆதியும் அந்தமும் சீவியருமாய் இருக்கிறேன். நான் மரித்தேன் ஆகிலும் இதோ என்றென்றைக்கும் ஜீவனுள்ளவராய் இருக்கிறேன். மரணம், நாகம் இவைகளின் திறவுகோல் என் கையில் இருக்கிறது" என்று கூறியதாகவும் எழுதுகிருர். அன்றியும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தோர் அனுபவிக்கப்போகிற துன்பங்களையும், பசாசின் சூட்சிகளையும், இதில் வெற்றி காண்பவர்களின் நாமம் ஜீவ புத்தகத்தில் பொறிக்கப்பட்டிருப்பதையும், ஜீவ புத்தகத்தின் முத்திரைகள் உடைக்கப்பட்டபோது உலகில் நடைபெற இருக்கும் அசம்பாவித செயல்களையும், சங்கரிப்புகளையும், பரிசுத்தவான்களின் போராட்டங்களையும் காட்சியில் கண்டார். அத்துடன் பன்னிரண்டு கோத்திரத்தின் பிதாப்பிதாக்களும், பன்னிரு அப்பேஸ்தலரும் ஆட்சியாளராக அவர்கள் நாமம் பதிக்கப்பட்டிருந்ததையும் தரிசித்தார். (புனித அரு. காட்சி ஆக. 21ஆம் அதி. 12—14 வச.) "அதற்குப் பன்னிரண்டுவாசல்கள் இருந்தன. அந்த வாசல்களில் பன்னிரண்டு தூதர்கள் இருந்தார்கள். அவைகளின் மேல் இஸ்ராயேல் புத்திராகிய பன்னிரண்டு கோத்திரங்களின் நாமங்களும் வரையப்பட்டிருந்தன. நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திவாரங்கள் இருந்தன. அவைகளில் செம்மறிப்புருவையானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பன்னிரணடு நாமங்களும் இருந்தன." அத்துடன் அவரது காட்சியில் விரத்தர்களான துறவியருக்கு முதலிடமும், வேதசாட்சிடாக இரத்தம்சிந்தியோருக்கு அதற்குரிய விசேஷ இடமும், அதற்கப்பால் (புனித அரு. காட். ஆக. 19ஆம் அதி. 4-ம் வசனம்) தொடக்கம், இருபத்திநான்கு வயோதிபர்களும நான்கு ஜீவஜெந்துக்களும் தெண்டனுக விழுந்து "ஆமென்! அல்லேலூயா! என்று சொல்லி சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனை நமஸ்கரித்தார்கள். சிங்காசனத்தினின்று ஒரு குரற்சத்தம் புறப்பட்டு, நம்முடைய சர்வேசுரனுடைய ஊழியரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோரும் அவருக்குப் புகழ் கூறுங்கள், நாம் களித்து மகிழ்ந்து அவரை மகிமைப்படுத்துவோமாக. ஏனெனில் செம்மறிப்புருவையானவருடைய கலியாண நாள் வந்தது. அவருடைய பத்தினியும் தன்னை ஆயத்தப்படுத்திருக்கிருள். பளபளப்பான மெல்லிய வஸ்திரம் தரிக்கும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம், புனிதர்களுடைய புண்ணியசெயல்களாமே" என்று கூறுவதைக் கேட்டார். அத்துடன் "செம்மறிப்புருவையான வருடைய கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவாகள் பாக்கியவான்கள்" என்று எழுது என்று கூறுவதைக் கேட்டார். அதன் பின்பாகப் பிரமாணிக்கமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், இரத்தத்தினுல் தெளிக்கப்பட்ட வஸ்திரத்தை தரித்து தேவனுடைய வார்த்தையென்று அதில் எழுதியிருந்தவரையும் கண்டார். அதன் பின் உலகில் உள்ள யாவும் பயங்காத்துக் குரியவிதமாக அழிந்துபோக, (21ஆம் அதி, 1-ம்,2 ம் வசனம்) "பின்புநான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்! முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின. சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. அருளப்பனுகிய நான் புதிய எருசலேம் நகராகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன். அது தன் பத்தாவுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாளிபோல் இருந்தது" என்ருர். இக் காட்சியைக்கண்ட புனித அருளப்பர் இதோ மனிதரோடு சருவேசுரன் வசிக்கும் ஸ்தலம் என்று கூறுவதையும் கேட்டார் கடைசியாக "எல்லாம் முடிந்தது. நானே அல்பாவும் அந்தமுமாய் இருக்கிறேன், தாகமாய்இருக்கிறவனுக்கு ஜீவ நீரூற்றில் இலவசமாய்க் குடிக்கக் கொடுப்பேன். ஜெயங்கொள்பவன் இவைகளைச் சுதந்தரித்துக்கொள்வான். நான் அவனுக்குத் தேவனுய் இருப்பேன் அவன் எனக்குப் பிள்ளையாய் இருப்பான்" என்ருர்.

# தேவ ஆட்களின் கிரியைகள்

**— பிதா உவில். யேசுதாசன், ஓ. எம். ஐ. —**

15ஆந் திகதிப் பாதுகாவலனிலே பி. ஜே. அமிர்தநாயகம் திரித்துவத்தைப் பற்றி எழுதினதை வாசித்துச் சந்தோஷமானேன். பைபிள் புத்தகங்களிலே தேவ ஆட்களின் கிரியைகளைக் குறிக்கிற சொற்கள் வெவ்வேறு விதமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. "சகலமும் அவரிலிருந்தும் அவர்மூலமாயும் அவரிலேயும் வருகின்றது" என்ற வாக்கியத்தின் சொற்கள்தான் திரித்துவ ஆட்கள் நமக்கு நித்திய சீவியத்தைத் தருவதைச் சரியாய்க் குறிக்கின்றன என்று கீழே வருவதிலிருந்து காண்கலாம்:—

1. **"அவரிலிருந்தும்"** = பிதாவானவர், சிருட்டிப்பினுலும், பராமரிப்பினுலும், கதியமிப்பினுலும் நமது நித்திய சீவியத்திற்கு உற்பத்தியாயிருக்கின்ருர்.

2. **"அவர்மூலமாயும்"** = சுதனுனவர், மனித அவதாரத்தினுலும், பலியளிப்பினுலும், மகிமையடைவினுலும் நமது நித்திய சீவியத்திற்கு நடுவராயிருக்கின்ருர்.

3. **"அவரிலேயும்"** = ஆவியானவர், திருச்சபையோடு இணைப்பதினுலும், அர்ச்சிப்பதினுலும், பதிலளிப்பதினுலும் நமது நித்திய சீவியத்திற்கு நிறைவராயிருக்கின்ருர்.

"எல்லாம் உமக்காகவும், உம்மைப்போலவும், உம்மோடும் செய்கிருேம்" என்ற வாக்கியத்தின் சொற்கள்தான் நாம் நித்திய சீவியத்தைத் திரித்துவ ஆட்களிடமிருந்து பெறுவதை சரியாய் குறிக்கின்றன என்று கீழே வருவதிலிருந்து காணலாம்;

1. **"உமக்காகவும்"** = பிதாவே! வெளிச்சம், துணை, ஏவல், மனந்திருப்புதல், பொறுத்தல், இரட்சிப்பு, ஆளுகை என்னும் உமது செயற்பிரசாத உதவிகளைக்கொண்டு, உமது மகிமையைக் கருதுவதினுல் நம்மை நித்திய சீவியத்திற்கு ஆயத்தப்படுத்துகிருேம்.

2. **"உம்மைப்போலவும்"** = சுதனே! ஞானஸ்நானம், நற்கருணை, உறுதிப்பூசுதல், மெய்விவாகம், பச்சாத்தாபம், நோயிற் பூசுதல், பட்டாபிஷேகம் என்னும் உமது திருஅனுமான உதவிகளைக்கொண்டு உம்மைப் பின்பற்றுவதினுல் நமக்கு நித்திய சீவியத்தை உரிமையாக்குகிருேம்.

3. **"உம்மோடும்"** = ஆவியே! விசுவாசம், நம்பிக்கை, அன்பு, விவேகம், தைரியம், மிதம், நீதி என்னும் உமது பதித்த புண்ணிய உதவிகளைக்கொண்டு, உமது பிரசாதத்தில் நிலைத்திருப்பதினுல் நமக்குள் நித்திய சீவியத்தைப் பெறுகிருேம்.

## தாயே தஞ்சம் நீ.....

தாயே தஞ்சம் நீ கதியே!
தரணியில் பாவி யான் ஏன்
பிறந்தேன்
கருணை நினதே! கன்னிமாமரியே
பாவிக்குன் பதசேவை
தானருள்வாய்.

தாயும் நீயே தயாபரியும் நீயே!
தஞ்சமென் ருேர்களுக்
கடைக்கலமும் நீயே!
தனியளாய் தவிக்கின்றேன்,
தயங்குகின்றேன்
தற்பரன் தாயே! தாபரி எனையே.

அலைவாய் துரும்புபோல்
அலைகின்றேன் இப்புவிமீதே
ஆதாரம் நீயன்றி வேருேர்
துணையில்லை
அபயம் நீயே! அருள்வாய் நிதியே!
அன்னைமாமரியே ஆதரி எனையே!

திருமதி திரேஸ் வின்சன்ற்,
மாத்தளை.

### புனித கிறிஸ்தோப்பரின் பிரஸ்தாபம்

புனிதகிறிஸ்தோப்பர் திவ்விய பூசைப் பஞ்சாங்கத்தில் இல்லாதிருக்கலாம். ஆனுல், நிச்சயமாகவே அவர் மக்களின் இதயங்களில் இல்லாமலில்லை. உதாரணமாக, ஜேர்மனியில் அநேகம் நகர்களும் கிராமங்களும் வீட்டுச் சுவர்களிலே புனித கிறிஸ்தோப்பரின் வர்ணச் சித்திரங்களைக் கொண்டு விளங்குகின்றன. அவற்றில் அநேகம் புதிதாகச் சித்திரிக்கப்பட்டனவாகும். இங்கிலாந்திலுள்ள கோவில்களிலே அவருடைய படங்கள் ஆயிரக் கணக்கிலே இருந்துவருகின்றன. புருெட்டஸ்தாந்த மதத்தை உண்டுபண்ணியவர்கள் எத்தனையோ சுவர்ச் சித்திரங்களை அழித்துவிட்டபோதிலும் அவருடையனவாய் 186 சுவர்ச் சித்திரங்கள் இன்றும் காணக்கிடக்கின்றன. அக் காலத்திலே சுருபங்கள் படங்களைச் சுத்தியல் கொண்டு உடைத்தவர்களின் கைகளுக்குத் தவறியனவாய்க் குறைந்தபட்சம் 30 கோவில் கண்ணுடிச் சித்திரங்கள் இருக்கின்றன. புனிதகிறிஸ்தோப்பரின் பிரதிமையைக்கொண்ட தபால் முத்திரை ஒன்று வியன்னு நகர் மேற்றிராசனத்தின் 500-ம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக 1969-ம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

● இருதய நோயுள்ளவர்களைத் தேநீர் அருந்தும்படி அமெரிக்க டக்ரர்மார் இப்போது ஆலோசனை கூறிவருகின்றனர். இரத்தம் கட்டியாவதைத் தேநீர் குறைக்கிறதென்றும், அது சீரணத்தைத் துரிதப்படுத்துகிறதென்றும் இந்த டக்ரர்மார் ஆராய்ச்சியிலே கண்டறிந்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"உண்மையாகவே யேசு உன்னோடு பேசினரானல், நீ அவருக்குச் சொல்லவேண்டியது இதுதான்; சுவாமியார் நான் சொல்வதை நம்புகிறரில்லை; தான் நம்பவேண்டுமானல் அத்தாட்சி வேண்டுகின்ருர்; அந்த அத்தாட்சி இதுதான்; இங்கே பிரசித்தபாவி ஒருவன் இருக்கின்ருன்; அவன் நம் திருமறையிலிருந்து தவறிப்போன ஒரு கத்தோலிக்கன்; இன்ரூ அவன் நம் திருமறைக்கு ஒரு சென்மசத்துருவாக இருந்து வருகின்ருன்; அவன் திடீரென ஓர் அற்புதமாக மனந்திரும்ப வேண்டும்" என்பதே.

# உண்மையாக அவர் உன்னோடு பேசினரானல்!

அவர் திருஇருதய அன்பர், அவர் திருஇருதய அன்பர்களுக்கெல்லாம் ஒரு பெரிய அன்பர், கத்தோலிக்க குடும்பங்களிலும், மற்றும் பல கத்தோலிக்க ஸ்தாபனங்களிலும் திருஇருதய அரசாட்சியை ஏற்படுத்தியவர். இன்று கத்தோலிக்க உலகமுழுவதிலும் திருஇருதய அரசாங்கம் ஸ்தாபிக்கபபட்டிருந்தால் அதற்கெல்லாம் முன்னேடியாகவும், அதனைப் பாப்புவதில் முதன்மைவாய்ந்த பிரசாரகருமாய் விளங்குபவர். அவர் நாடுகள் தோறும் சென்று இந்தப் பக்திமுயற்சியைப் பாக்கச் சிறக்கப் பரப்பியதாலே இன்று கோடிக்கணக்கான கத்தோலிக்க இல்லங்களில் மட்டுமன்று, மற்றும் கிறிஸ்தவ இல்லங்களிலும் திருஇருதய ஆண்டவரின் திருச்சுரூபங்களும், படங்களும் சிறப்பாக ஸ்தாபிக்கப்பட்டு, திருவிளக்கேற்றப்பட்டு, நறுமலர்கள் சாத்தப்பட்டு, அவ்வில்லங்களையும், குடும்பங்களையும் புனிதப்படுத்தியும், அழகுபடுத்தியும் கொண்டிருக்கின்றன. இந்தப் பக்திமுயற்சியின் ஆரம்ப கர்த்தா யார்? வண. மத்தியோ கிரேலி எனும் பரிசுத்த குருப்பிரசாதியே.

அவருக்கே இச்சம்பவம் நிகழ்ந்தது. தென்னமெரிக்காவிலே சிலிநாட்டைச் சேர்ந்த வல்பறெய்சோ நகரில் ஓர் இளம் குருப்பிரசாதியாக அவர் இருந்து வருங்கால், பிள்ளைகளை முதன்நன்மைக்கு ஆயத்தஞ் செய்துவரும்பொழுது, அவர்கள் யேசுவிலே தங்கள் அன்பைக் காண்பிக்கும் பொருட்டுச் சிறு சிறு ஒறுத்தல்களாகிய பரித்தியாகங்களைச் செய்வதில் அவர்கள் உதாரகுணமாய் இருந்துவரவேண்டுமென்று அவர்களைத் தூண்டிவந்தார். அவர்களில் ஒரு சிறுமி அதிகம் உதாரமனம் காண்பித்து அநேக பரித்தியாகங்களைச்செய்தாள்.

அவள் முதன்நன்மை பெற்றுச் சில தினங்களின்பின் ஒருநாள் மத்தியோ சுவாமியாருக்குச் சொல்லுவாள்: "சுவாமி, நீ நம்மை உள்ளபடியே நேசிக்கிருயோவென்று இன்று காலை யேசு என்னைக் கேட்டார்."

"அப்படியானல் நமது ஆண்டவர் உன்னோடு சம்பாஷிக்கிருர் என்றுதானே நீ கருதுகிருய்?"

"ஆம், சுவாமி, நான் திவ்வியநன்மை பெறப்போகும் ஒவ்வொரு தடவையும் அவர் என்னோடு சம்பாஷிக்கிருர்."

"நல்லது, அவர் உன்னோடு சம்பாஷிக்கிருரானல் அவர் உனக்கு என்ன சொல்லுகிருர்?"

"நான் உள்ளபடியே தம்மை நேசிக்கிறேனேவென்று அவர் என்னைக் கேட்டார். அவர் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்கப்படாதென்று நான் அவருக்குச் சொன்னேன். ஏனென்று அவர் என்னைக் கேட்டபொழுது, 'நீர் என் இறைவனுய் இருக்கிறீர்; நான் உம்மை நேசிக்கிறேனேவென்று நீர் அறிவீர்' என்று நான் அவருக்குச் சொன்னேன். "நாம் அதை அறிவோம்; ஆனல், நீயே அதை நமக்குச் சொலவதைக் கேட்கவேண்டுமென்றே நாம் ஆசிக்கின்ருேம்."

மத்தியோ சுவாமியாரோ அத்தாட்சி வேண்டுமென வற்புறுத்திக்கேட்டு அச்சிறுமியை நோக்கிச் சொலலுவார்: "உண்மையாகவே யேசு உன்னோடு பேசினரானல், நீ அவருக்குச் சொலல வேண்டியது இதுதான். "சுவாமியார் நான் சொன்னதை நம்புகிறரில்லை; தான் நம்பவேண்டுமானல் அத்தாட்சி வேண்டுகிருா: அந்த அத்தாட்சி இதுதான்; இங்கே பிரசித்தபாவி ஒருவன் இருக்கின்ருன்; அவன் நம்திருமறையிலிருந்து தவறிப்போன ஒரு கத்தோலிக்கன்; இன்ரூ அவன் நம் திருமறைக்கு ஒரு சென்மசத்துருவாக இருந்துவருகிருன்; அவன் திடீரென ஓர் அற்புதமாக மனந்திரும்பவேண்டும; இந்த மனிதன் என்னிடம் பாவசங்கீர்த்தனத்துக்கு வருவானகில், அப்பொழுது உள்ளபடியே யேசு உனனுடன் பேசினரென்று நான நம்புவேன்."

அவருடைய வேண்டுகோளை யேசுவிடம் கொண்டுசெல்வதாக அவளும் வாக்களித்தாள். ஏறக்குறைய ஒருவாரம் சென்றது. மத்தியோ சுவாமியார் கோவிலிலே பாவசங்கீர்த்தனங்கள் கேட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது சிறுமி ஏதோ மனவெழுச்சி கொண்டவள்போல் கோவிலுள் பிரவேசித்துப் பாவசங்கீர்த்தனத் தட்டிக்குச் சென்ருள். சுவாமியார் முன்பு தாம அவளுக்குச் சொன்ன காரியத்தை மறந்துவிட்டார்போல் பாவனைசெய்து, ஏன் பிள்ளை வந்தாய் என்று அவளைக் கேட்டார்.

ஆனல், அவளோ கருமத்தைத் தானகவே தொடக்கித் தனது ஆத்தும குருவின் வேண்டுகோளைத் தான் யேசுவிடம் எவ்வாறு தெரிவித்தாளென்றும், தான் கேட்ட ஆத்துமத்தையும், மற்றும் அநேக ஆத்துமங்களையும் அவர் தனக்குக் கொடுப்பதாகச் சொல்லி ஆண்டவர் எவ்விதம் பதிலளித்தாரென்றும் சுவாமியாரிடம் எடுத்துக் கூறினள். "எப்போதுமே நம்மிடம் ஆத்துமாக்களைக் கேள்; நாம் அவைகளை உனக்குத் தருவோம்; நம்மிடம் ஆத்துமாக்களைக் கேட்கும்படியாகச் சுவாமியாரிடம் சொல்; நாம அவைகளை அவருக்குமே தந்தருள்வோம்; ஆனல், நீ மூந்த மூந்த நமது மிஷனரியாக வேண்டுட" என்று அவர் என்னிடம் தெரிவித்தார்.

"மிஷனரி" என்றவார்த்தையைக் கேட்டதே அவள் திகைத்து ஆச்சரியமுற்றவளாய், தான் அதிகம் சிறியவளாய் இருப்பதாக அவரிடம் கூறினள். "எனக்கு எட்டு வயது மட்டுமே" என்ருள். தாம அவளைத் தம்முடைய மிஷனரியாக்குவதாக ஆண்டவர் உறுதிமொழி கூறினர். ஆனல், ஆத்துமாக்களுக்காக அவள் ஒரு குறித்த விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்ருர், "மூன்று தங்கப் பென்னி நாணயங்கள் நீ சம்பாதிக்க வேண்டுமென நாம் ஆசிக்கிருேம்."

"மூன்று பென்னிகளை மட்டும எடுக்கவேண்டாம்; எனது சேமிப்புவங்கி முழுவதையுமே எடுத்துக்கொள்ளும" என்பதே அவளுடைய பதிலாயிற்று. அதன மேல் நமது ஆண்டவர்தாமே பின்வருமாறு விளக்கினர். முதலாவது தங்கப்பென்னி; ஆத்துமாக்களுக்காக அவள் நமக்குச்செய்யும் செபங்கள். இரண்டாவது: தங்கப்பென்னி; அவளுடைய சிறியதியாகங்கள், விசேடமாய்க் கீழ்ப்படிதல் கிரிகைகள். மூன்ருவது தங்கப் பென்னி: "உன்னுடைய சுயதவறு காரணமாகத் திவ்வியபூசை காண அன்றேல் திவ்வியநன்மை வாங்க ஒரு போதுமே தவருதிருப்பதும், தேவநற்கருணையிலே நம்மை அடிக்கடிவந்து சந்திப்பதும்."

உதாரமனமுடைய இந்தச் சிறிய மிஷனரி யேசு தன்னிடம்வேண்டிய விலையைக் கொடுத்தாள். அவளுடைய நம்பிக்கையும், உதாரகுணமும் விரைவிலே பலனளித்தது. மத்தியோ சுவாமியார் பாவசங்கீர்த்தனத்தட்டியை விட்டு எழுந்து செல்லவிருக்கையில், அந்தப்பிரசித்தபாவி, நம் திருமலறயின் சென்மசத்துருவாய் இருந்தவன் கோவிலுள் பிரவேசித்து, "சுவாமி, ஒரு நிமிடம் பொறுக்கவேண்டும்; எனக்கு என்ன நேர்ந்ததோவென்று நான் அறியமாட்டேன்; ஆனல், இன்று காலையிருந்து நான் ஒரு மாறுபட்ட மனிதனுய் இருப்பதாக மனதில் உணருகிறேன்; என் உள்ளத்திலிருந்து ஏதோ ஒன்று பாவசங்கீர்த்தனத்துக்குச் செல்லும்படியாக என்னைத் தூண்டியவண்ணம் இருக்கிறது; சுவாமி, தாங்கள் எனக்கு உதவிசெய்யவேண்டும்; ஏனெனில், இதுவே எனது முதற்பாவசங்கீர்த்தனமாய் இருக்கப்போகிறது" என்ருன். மத்தியோசுவாமியார் இதைக் கேட்டு திகைத்துப் போயினர்; அவர் உள்ளம சந்தோஷத்தால் மலர்ந்தது. தாம் ஆசித்த காரியம் அச்சிறுமியால் கைகூடியதையிட்டு இறைவனுக்கு நன்றித்துதி கூறினர். அவனும் மனந்திரும்பினன். சுவாமியாரிடம் பாவசங்கீர்த்தனம் செய்தான். ஒரு புதிய மனிதனுக் கோவிலைவிட்டுச் சென்ருன். சுபம்.

— ஞானம்

# பணக்காரப் பிள்ளை

ஓடிக்கொண்டிருக்கும் சினிமா விமர்சனம் அல்ல. நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்; அதை ஏற்றுக்கொள்ளுவோம். எதனை? நாமும பணக்காரப்பிள்ளைகள் என்பதனை, ஏழை செல்வர் என்ற ஏற்றத்தாழ்வு உலகில் இல்லை என்பதை உங்கள் சிந்தனை முடிவு செய்யும். உலகவாழ்விலே வறுமையும் செல்வமும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் அவை என்றும் நிலைத்துநிற்பதில்லை. ஆனல் நாம் முயற்சி செய்தால் என்றும் பணக்காரப்பிள்ளைகளாக வாழலாம்.

புரியாத பலர், தெரியாத சிலர் பொக்கிஷங்களைச் சேர்க்கின்றனர், உண்ணுமல் உறங்காமல். வேண்டாம் வேண்டாம் என ஆண்டவர் கூறுகிருர். பூலோகத்தில் உங்களுக்குத் திரவியங்களைத் தேடவேண்டாம். அங்கே அந்துவும் துருவும் அரிக்கிறது, திருடரும் கன்னமிடுகின்றனர். உங்கள் திரவியங்களைப் பரலோகத்தில் சேர்த்து வையுங்கள். ஆண்டவன் படைத்து எம்மிடம் கொடுத்த அனுபவி ராஜா அனுபவி என்று எம் அனைவரையும் அனுப்பியிருக்கிருர். மாடுறை தொழுவில் வந்து பாடுகள்பலபட்டு அவற்றின்பயனுக் கோடானுகோடிபலன்களைத் தேடிவைத்துப் போனர் கிறிஸ்து. இல்லைப் போகவில்லை. வருந்திச் சுமை சுமப்போரே வாருங்கள் என்று எம்மை அழைக்கிருர். எம்மிடையே வாசம்செய்கிருர். ஆனல் ஆழ்ந்து சிந்தித்தோமா? இல்லை.

நாம் பணக்கார வீட்டுப் பிள்ளைகள்—பணம் வேண்டும்—பொருள் வேண்டும்—நல்ல உணவு வேண்டும்—உயர்தர ஆடைகள் வேண்டும்—மாடமாளிகை போன்ற ஒரு வீடு—பெரியோர் எனப்படுவோரின் உறவு என்பன எல்லாம் வேண்டும்.

கல்வாரிக் குன்றிலே......

அன்றிலிருந்து கிறிஸ்துவின் பாடுகளின் பெறுபேறுகள் கால்வாய்கள் மூலம் வழிந்தோடுகின்றன. அதனை அள்ளிப்பருகிய அத்தனைபேரும் அளவு கொள்ளாப் பயன் அடைந்தனர்.

வந்தவர்கள்—வரவிருப்பவர்கள் அத்தனை பேருக்கும் வேண்டியளவு பலன் தேடிவைத்துவிட்டு வாடிபோரே வாருங்கள் என வருந்தியழைக்கிருர். ஆனல் நாமோ ஊதாரிப்பிள்ளை போன்று உதறித் தள்ளிவிட்டுச் செல்கிருேம். பணக்காரப் பிள்ளைகள் அல்லவா? பகட்டான ஆடை வேண்டும். ஆடைதான் இல்லையே என்று அங்கலாய்க்கிருேம். ஏன் இந்த வீண் அங்கலாய்ப்பு. அருள்தரும் திருவருட் சாதனங்கள் இரக்கின்றனவே அவற்றின்மூலம் நாம் அணியப்பெறும் அழகிய ஆடையின் அழகினை ஆராய்ந்து பார்ப்பதில்லை. "தூய வெண்ணுடையைப் பெற்றுக்கொள் நித்திய சீவியத்தைப் பெற. இதை நீ மாசுபடாமல் நம் ஆண்டவரான யேசுநாதருடைய நீதியின் சிம்மாசனத்திற்கு முன் கொண்டுபோய்ச் சேர்ப்பாயாக." இவை நாம் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற்றபோது எமக்கு குருவானவர் கூறிய வார்த்தைகள். இதுபோன்றே தேவதிரவிய அனுமானங்களைப் பெறும்போதெல்லாம் தேவவரப்பிரசாதமென்னும் அழகிய ஆடையினைப் பெறுகிருேம்.

பணக்காரப்பிள்ளைக்கு வேண்டியது அறுசுவை உண்டி. அதுதான் நிறைய இருக்கிறது. தினமும் நடைபெறும் பந்தி. தம்மையே உணவாகத் தருகிருர். சம்மனசுகள் முதலாய் இப்பந்தியில் இருந்து உண்ணத் தகுதியற்றவர்கள். நாடோறும் தம்மையே எமக்களிக்கும் அழியா உணவைவிட மேலான உணவுவேறுண்டா? பேரியோர்கள், அரசர்கள், சக்கரவர்த்திகள், பிரபுக்கள் போன்ருேரின் உறவு வேண்டுமா? கிறிஸ்துவின் ஞான உடலில் பெரும் பங்கு எமக்குண்டு. குருக்கள், சந்நியாசிகள், மேற்றிராணிமார், கருதினல்கள், பாப்பு போன்ருேரின் ஞான உறவு நமக்குண்டு. பேலாகபுனிதர் எனப்படுவோரின் புனித உறவும் எமக்கிருக்கிறது. இவற்றைவிட மேலான உறவும் வேண்டுமோ?

மாடமாளிகை வேண்டுமோ பணக்காரப்பிள்ளைக்கு. அது தான் நம்மனைவருக்கும் நாம் சிருட்டிக்கப்பட்ட நாள் முதலாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது. தூயவர்இன்பம் துய்க்கும் தூய இடம். கடவுளைக் கண்ணுரக் கண்டு களிக்கும் மேலான வீடு, மாசற்றோர் வாழும் மகத்தான மாளிகை—அன்பு நிறையும் அமலன் மாளிகை. நித்திய இன்பம் என்றுகூறு முன்னே அது தெரிந்துவிடுகிறது. இந்த மாட மாளிகையை விட மேலானது வேறுஉண்டோ?

ஆம் நாம் அனைவரும் பணக்காரப் பிள்ளைகளேதான். இத்தகைய உன்னத நிலையை நாம் சிறிதளவேனும் சிந்திப்பதில்லை. நாம் ஏழைகளா? இல்லை கோழைகளா? இல்லை அனுதைகளா? இல்லை வறியோரா? அதுவுமில்லை. நான் பணக்காரப்பிள்ளை.

— இ. பேர்னுட்

● அயர்லந்தின் அதிவிருத்தாப்பிய குருவரான வண. மிக்கேல் றேய்னர் சுவாமியார் சமீபத்திலே டபிளின் நகரில் தமது 102ஆவது பிறந்த பெருநாளைக் கொண்டாடினர். இன்னுமே இவர் சமீபமாகவுள்ள வறியவர்களின் சிறிய கன்னிகாஸ்திரிமாரின் மடத்திலே ஞாயிற்றுக்கிழமை தோறும் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கிருர். இவர் 1900 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்ருர். அயர்லாந்திலே முதலாவது போட்காலாச்" செலுத்தியவர் இவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வாழ்வு

வண. காப்பர் அடிகளார் புகைவண்டியில் ஏறினார். அவரோடு ஒரு வாலிபனும் ஏறினான். வண்டி புறப்பட்டது. இருவரும் பேசிக்கொண்டே சென்றனர். அவர்களுக்கிடையில் காரசாரமான விவாதம் இடம் பெற்றது. அவனே ஒரு முற்போக்குவாதி. குருவானவருடைய சமயவிளக்கங்கள் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவருடைய வாதங்களை அவன் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. புரட்சிக்கொள்கைகளில் ஊறிப்போன அவனுக்கு சாஸ்திர ரீதியான பேச்சுக்கள் திருப்தியளிக்க முடியுமா? ஆனால் சுவாமியாருக்கு அவனுடையபேச்சும் போக்கும் விநோதமாகவே இருந்தது. வழிநெடுக திருச்சபையின் போதனைகளையும் கோட்பாடுகளையும் அவ்விளைஞன் வலுவாகதாக்கிப் பேசிக்கொண்டே இருந்தான். கண்டனக்கணைகள் பலதொடுத்தான். "நான் ஒரு முற்போக்குவாதி சுவாமி, எனக்கு உங்கள் சமயப்பிரதாபங்கள் ஒன்றும் தேவையில்லை. முன்னேற்றம் முற்போக்கு இவை இரண்டுமே இன்றைய உலகுக்கு அவசியம். வானகத்தில் தம்மைப் பூட்டி வைத்துக்கொண்டிருக்கும் இறைவனுக்கு முன்னால் முழந்தாட்படியிட விரும்புவர்யார்?" இவ்வாறு பலகேள்விக்கணைகளை அவன் விடுத்தான். "ஆர்னல்ட் மட்லி எழுதிய புத்தியும் கடவுளும் என்ற நூலைப்படித்திருக்கிறீர்களா? மிகச்சிறந்த சாதனை; மிகஅரியநூல். நீங்கள் தவறாது வாசிக்கவேண்டும்" என்றான் வாலிபன்.

சுவாமியாருக்குச் சிரிப்புத்தான் வந்தது. வாலிபனும் அவருடைய முகக்குறிகளால் தான்பேசும் பேச்சு வேடிக்கையாயிருப்பதாக உணர்ந்துகொண்டான். "நான் பேசியது வேடிக்கையாய் இருக்கிறதா சுவாமி? அறிவியலில் நன்கு முன்னேறியுள்ள இக்காலத்தில் நீங்கள் என்னதான் வாசிக்கிறீர்களோ?" என்று உடனே கேட்டுவிட்டான் இளைஞன். சிறிது நேர இடைவெளியின் பின் "எனது அன்றாட ஞான அலுவல்களுக்கே நேரமிராது; அப்படி நேரம் கிடைத்தால் அக்குயினஸ் தோமையாரின் நூலில் ஓரிரு மணித்தியாலங்களைச் செலவிடுவேன்" என்றார் சுவாமியார். "நான் ஒருபொழுதும் இந்நூலாசிரியரைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லையே. அவருடைய அபிப்பிராயங்கள்தான் என்னவோ; அவர் என்ன எழுதுகிறார்" என்று வாலிபன் ஆர்வத்தோடு கேட்டான். இன்றைய உலகுக்குத் தேவைப்படும் படிப்பினைகளை அன்றே அக்குயினஸ் எழுதிவிட்டார் என்று கூறவேண்டுமென்று நினைத்தார் சுவாமியார்; பின் ஏனோ அதைக் கூறவில்லை; ஆனாலும் ஒரு சில வார்த்தைகளாவது அவ்வாலிபனுக்குப் பயன்படக்கூடியதாக கூறவேண்டும் என்று ஆசைப்பட்டார். "முன்னேறிச் செல்லும் நவ உலகம் உண்மையில் மனிதருக்கு நற்பயன் விளைத்துள்ளதா? இன்று யுத்தங்கள் இல்லையா? பஞ்சம் இல்லையா? பட்டினி இல்லையா? முன்னேறும் உலகம் துன்பத்தில் நிதம் உழலும் மனிதகுலத்துக்கு விடுதலை அளித்துள்ளதா? சொல்லப்போனால் அறிவியலின் வளர்ச்சியினால் அழிவுகளே அனந்தம். மனிதனுக்குத் துன்பமும் கவலையும் அதிகரித்துள்ளதேதவிர குறையவில்லை. நீர் கூறுவதுபோல உண்மையில் முன்னேறுகிறோமா?" என்று பலவினாக்களை அடுக்கி அவனது சிந்தனையைத் தூண்டினார் சுவாமியார்.

(எஸ். எம். ஜே.)

சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு, மட்லி இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்குமே தமது நூலில் பதில் பரிகாரம் கூறியுள்ளார். அவருடைய சொற்பெருக்குகள் ஒன்றையும் நான் தவறவிடவில்லை. இப்பொழுதும் நான் அவரது உரை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவே போகிறேன். சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் ஒருமுறை அவருடைய சொற்பெருக்கை கேட்பது நலமாயிருக்கும்" என்று புத்திகூறும் தோரணையில் பேசினான் அந்தவாலிபன்.

"நான் இப்பொழுது ஆர்னல்ட் மட்லியின் உரைகளுக்குப்போக முடியாதவனாய் இருக்கின்றேன். நானும் மட்லியைப்போல் சிறந்த பேச்சாளர் ஒருவரின் உரைகளில் கலந்து கொள்ளவே போய்க்கொண்டிருக்கிறேன். அந்தப்பெரியாரின் சொற்பெருக்குகளைத் தவறவிட முடியாது. மேலும் நான் சார்ந்திருக்கும் கத்தோலிக்க சபையைக் கண்டிக்கும் ஒருவரின் உரைகளை என்னால் கேட்க முடியாது" என்று தீர்க்கமாகக் கூறினார் சுவாமியார்.

ஏதோ மறுப்புக் கூறுவதற்காக வாய்திறந்தான் இளைஞன். அச்சமயம் அவர்கள் இருந்த அறையின் கதவு கிறீச் என திறந்தது. ரிக்கற் பரிசோதகர் உள்ளே நுழைந்தார். "மன்னிக்கவேண்டும். நான் முன்னரே உங்கள் பிரயாணச் சீட்டுகளைப் பார்வையிட்டேன். உங்களில் ஒருவர் சமயகுரவராய் இருக்கவேண்டும்" அப்படித்தானே என்று காப்பர் சுவாமியாரை நோக்கிப் பேசினார் அந்தப்பரிசோதகர். "நீங்கள் ஒரு கத்தோலிக்க குருதானே," என்று வினவி பதிலும் பெற்றுக்கொண்டு மேலும் தொடர்ந்தார் அந்தப் பரிசோதகர். "உங்களைத்தான் தேடிவந்தேன்; இந்தவண்டியில் ஒரு பிரயாணி திடீரென நோய்வாய்ப்பட்டுவிட்டார்; அவருக்கு மாரடைப்பென்று நினைக்கின்றேன். ஒரு டாக்டர் அவருக்குச் சிகிச்சை அளிக்க அழைக்கப்பட்டிருக்கிறார். அந்த நோயாளியும் ஒரு கத்தோலிக்கனாயிருக்கிறார். நீங்கள் உடனே வரவேண்டும்" என்று கூறியதும் "வருகிறேன்," என்று புறப்பட்டார் குருவானவர்.

நோயாளி இருக்கும் பெட்டிக்கு வந்தார் சுவாமியார். அவரைக் கண்டதும் டாக்டர் விலகிக் கொண்டார். மரணத்தருவாயில் அவஸ்தைப்படும் மனிதன் சுவாமியாருடன் தனிமையில் விடப்பட்டான். அன்று வானகத்தில் தூதர்களுக்கு ஒரு மகிழ்ச்சித் தினமாயிருந்தது என்றால் மிகையாகாது. அடுத்த புகையிரதநிலையத்தில் வண்டி நின்றது. வெளியே காத்து நின்ற அம்பியூலன்ஸ் வண்டியில் நோயாளி ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்கு விரைந்து செல்லப்பட்டான். போகும் பொழுது "நன்றி சுவாமி" என்ற வார்த்தைகள் அவனது உதடுகளில் இருந்து மெதுவாய் வெளிவந்தன.

மீண்டும் சுவாமியார் தான் இருந்த பெட்டிக்கு வந்தார்.

"ாயருக்கோ சுகமில்லைப் போலும், ஐயோ பாவம். அவனும் உங்கள் சமயத்தவனாய் இருக்க வேண்டும். அவனுக்கு உங்களால் ஏதாவது நன்மை கிடைத்திருந்தால், அவன் நோயில் உங்கள்மூலம் ஆறுதல் அனுபவித்திருந்தால், மனித வாழ்வில் சமயம் அவசியம் என நான் ஏற்றுக் கொள்ளத் தயார்" என்றான் அந்த முற்போக்கு வாலிபன். மேலும் அவன் "என்றாலும் எனக்கு என்னவோ கொஞ்சம் தடுமாற்றம்தான். நீங்கள் பார்வையிடச் சென்ற நோயாளி கட்டுப்பாடாக வளர்ந்திருக்க வேண்டும். சமயக் கட்டுப்பாடுகளின் பிணிப்புகள் அவனோடு இரண்டறக் கலந்திருக்கவேண்டும். எனக்கு அதில் நம்பிக்கை வராது. ஆர்னல்ட் மட்லியும் முன்பு ஒரு கத்தோலிக்கராகவே இருந்தார். அவருக்குச் சமய சம்பிரதாயங்கள் நன்கு தெரியும். அவர்தான் இப்பொழுது புரட்சிவாதியாகிவிட்டார். அவருடைய உரைகள் மிக முற்போக்கானவை என நான் கருதுகிறேன்" என்று பேசிக்கொண்டிருந்தான்.

"நண்பனே, உமது அபிமான பேச்சாளன் மட்லியுடைய சொற் பெருக்கை இன்று நீர் கேட்கமுடியாது. இப்பொழுது சற்று நேரத்துக்குமுன் அம்பியூலன்ஸ் வண்டியில் கொண்டு செல்லப்படும் நோயாளி மட்லிதான். கடவுளின் அருளால் அவர் மீண்டும் ஒரேமந்தையில் சேர்ந்து கொண்டார். அவர் கத்தோலிக்க திருமறையில் திரும்பவும் உறுப்பினராகிவிட்டார்" என்று பதில் கூறினார் சுவாமியார். பேய் அறைந்தவன்போல் திகைத்தான் வாலிபன். சுவாமியார் அமைதிதவழும் முகத்துடன் செபப்புத்தகத்தை எடுத்துக் கடமைச் செபத்தை வாசிக்கத் தொடங்கினார்.

## இவர்களால்தான் மழைபெய்கிறது

கடைக்குப் போய்வந்த களைப்புத்தீர மின்சார விசிறியின்கீழே சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டார் ஷீலா. திடீர் என்று 'ஷாக்' அடித்ததுபோல் துள்ளி எழுந்தார் அவர். காரணம்: பர்ஸை எங்கேயோ விட்டுவிட்ட நினைவு வந்ததுதான். பரபரப்புடன் தான் வாங்கி வந்த துணிமணிகளை எல்லாம் கலைத்துப் பார்த்தார்: உதறிப் பார்த்தார். 'ஊஹூம்' பர்ஸோடு போன ரூபாய் என்ன ஒன்ரு இரண்டா? ஐயாயிரமும் சில்லறையும்! அப்படியே அதிர்ந்துபோய்ச் சிலையாக நின்றிருந்தார் ஷீலா. "அம்மா" என்ற குரல் கேட்டது. அவர் திரும்பிப் பார்த்தார். எதிரே நின்றார் ஒரு டாக்ஸி டிரைவர்!

"இந்தாங்க, டாக்ஸியிலே பர்ஸை விட்டுவிட்டுப் போயிட்டீங்களே" என்று கூறிப் பர்ஸைக் கொடுத்துவிட்டுப் பதிலுக்குக் கூடக் காத்திராமல் சென்றுவிட்டார் அந்த டிரைவர்.

'தாங்க்ஸ்' கூட வாய்குளிரச் சொல்ல முடியாமல் போனதுபற்றி வருத்தப்பட்டு நின்றார் ஷீலா. "நம் நாட்டில் மழை ஏதோ கொஞ்சநஞ்சம் பெய்கிறது என்றால், இவரைப்போன்ற மனிதர்களால்தான்" என்கிறார் தங்கப் பதக்கம் பரிசுபெற்ற 'செம்மீன்' ஷீலா.

— தினமணி கதிர்.

## தெரிந்துகொள்ளுங்கள்

**மண்ணுக்குள் மாடி வீடு:** ரோக்கியோவில் ஒன்பது அடுக்குள்ள மாடி வீடு ஒன்று கட்டப்படுகிறது ஆனால், இதில் 3மாடிகள் தான் வெளியில தோன்றும். மிகுதி ஆறும் நிலத்துக்குள்ளேயே இருக்கும்.

**தாய்ப்பாசம்:** புலிக்குத்தான் தாய்ப்பாசம் அதிகம். தனது குட்டி இறந்து விட்டால் அதிக நாட்களுக்கு உணவு கொள்ளாது. துக்கம் மறக்கும்வரை பட்டினி கிடக்கிறது.

**மொழிகள்:** உலகில் மொத்தம 2796 மொழிகள் பேச்சு வழக்கில் இருந்து வருகின்றன.

**உணவு:** சாதாரணமாய் ஒரு மனிதன் தன் வாழ்வில் உட்கொள்ளும் உணவின் நிறை 50 டன்!

**அதிசய மணியோசை:** ரஷ்யாவில் கிரெம்ளின் அரண்மனையில் ஒரு மணி இருக்கிறது. இது போன்ற மணி உலகில் வேறு எங்கும் இல்லை. கடிகாரம் ஒன்றில் உள்ள இந்த மணியோசை ஏறக்குறைய 20மைல்களுக்குக் கேட்கிறதாம். இக்கடிகாரம் இப்போதும் ஓடிக் கொண்டிருக்கிறது.

**பஸ்டிறைவர்—கண்டக்டர்:** பாரிஸ் நகரில் எம். ஏ. (M. A.) படித்தவர்களும் அதற்குமேல் படித்தவர்களும் பஸ்டிறைவர்களாகவும், கண்டக்டர்களாகவும் பணிபுரிகின்றனர். இதனால் அவர்கள் பண்பாட்டுடனும், நாகரிகத்துடனும் மக்களுடன் பழகிக்கொள்வதினால் மக்கள் பஸ்களில் பிரயாணம் செய்ய ஆசைப்படுகின்றனராம்.

**இரவும் பகலும்:** சந்திரனில 14நாட்கள் இரவாகவும் 14நாட்கள் பகலாகவும் இருக்கும். தினசரி பகலிரவாகச் சந்திரனில் இருக்கமாட்டாது.

சேகரிப்பு: இ. பே.

## ஆர்ஜன்ரீன் ஜனதிபதி ....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புதிய இயக்கத்தை அடக்க உதவி கேட்டிருக்கின்றனர். இந்த இயக்கத்தில் அநேக குருமார் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்றும், அவர்கள் வறிய மக்களின் சார்பாக இருப்பதனாலேயே அவ்வியக்கம் வளர்ந்து கட்டுக்குஅடங்காது வளர்ந்துவருகின்றது என்பதும் அவர்களது கோட்பாடு. குருமார் இவ்வியக்கத்துக்கு அளித்துவரும் ஆதரவைக் கட்டுப்படுத்துவதால் மக்கள் மத்தியில் அமைதி ஏற்பட்டுவிடும் என்பது புதிய அரசாங்கத்தின் அபிப்பிராயமாகும்.

## சிரியுங்கள்

ஆசிரியர்: "மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்" என்ற வார்த்தைக்குச் சந்தர்ப்பங் கூறி விளக்குங்கள்.

மாணவன்: சேர், உங்களுக்கு மன்னிப்பே கிடைக்கமாட்டாது.

ஆசிரியர்: ஏன்டா?

மாணவன்: நாங்கள் ஒரு சிறுகுற்றம் செய்தாலும் மன்னிக்காது தண்டிக்கிறீர்களே, அப்போது எப்படி உங்களை இறைவன் மன்னிப்பார்?

* * *

மாணவன்: ஏன் சார் வீடுகளில் பூசணிக்காய் கட்டித் தூக்குகிறார்கள்?

ஆசிரியர்: அது ஏனெனில் வீடு மற்றவர் கண பட்டுவிட்டால் தோஷம் ஏற்படாது இருப்பதற்காகத்தான்.

மாணவன்: அப்போ சார், இராமன் நல்லகெட்டிக்காரன், அவனையும் மற்றவர்களின் கண் பட்டுவிட்டால் தோஷம்பிடிக்காமலிருப்பதற்கு அவன் கழுத்திலும் ஒரு பூசணிக்காயைக் கட்டவேண்டியது தானேசார்.

* * *

ஆசிரியர்: கஷ்டப்பட்டு ஊக்கப்பட்டு எதைச் செய்தாலும் முன்னேற்றமும் பயனும் கிட்டுமாகையால் கஷ்டப்பட்டுப் படியுங்கள்.

மாணவன் ஒருவன்: அப்போ சார் பட்டமரத்துக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு வந்தால் அது தளைத்துப் பலன் கொடுக்குமா?

— தே. மரியநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### ஆவணி — 1970

| | | | |
|---|---|---|---|
| 23 | ஞாயிறு | வருடத்தின் 21- ஞாயிறு | [ப] |
| 24 | திங்கள் | புனித பத்தலமேயு | [ப] |
| 25 | செவ்வாய் | தினப்பூசை | [ப] |
| 26 | புதன் | ,, | [ப] |
| 27 | வியாழன் | ,, | [ப] |
| 28 | வெள்ளி | புனித அகஸ்தீனூர் | [வெ] |
| 29 | சனி | புனித தி. மு. அரு. | [சி] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# தணிக்கை அவசியமா?

தணிக்கை சபையையும் அதனுடைய கடமைகள் அதிகாரங்களையும் பற்றி சமீபத்தில் சில கருத்துக்கள் பத்திரிகைகளில் அடிபட்டன. தணிக்கைக்கு உட்படுவன பெரும்பாலும் திரைப்படங்களே யானபடியால் அத்துறையில் தணிக்கை ஏன் என ஆராய்வோம். ஏனெனில், தணிக்கை இருக்கவேண்டுமா என்ற கேள்வி சமீபத்தில் எழுந்துள்ளது. சிறுவர்கள் விஷயத்தில் அபிப்பிராய பேதத்துக்கு இடமில்லை, அவர்களது பிஞ்சு உள்ளங்களை மாசுபடுத்தக்கூடிய எதையும் அவர்கள் பார்க்க அனுமதிக்கலாகாது. ஏனெனில், அவர்களுக்கு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சக்தி இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், பெரியவர்கள் விஷயத்தில் ஒருவர் எதைப் பார்க்கலாம், எதைப் பார்க்கக்கூடாது என்று கூற மற்றொருவருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று வாதாடுகின்றனர் தணிக்கை எதிர்ப்பாளர். சிறுவரைவிட பெரியவர்களுக்கு கூடிய சுதந்திரமும், உரிமைகளும் உண்டென்பது மெய்தான். ஆனால், அவையும் ஓர் எல்லைக்குட்பட்டனவே. எல்லையற்ற சுதந்திரம் நன்மைக்குப் பதில் தீமையே விளைக்கும்.

முதலில் தணிக்கையாளரால் தடை செய்யப்படக் கூடியவை எவை என்று பார்ப்போம். ஆபாசமான சன்மார்க்கத்துக்கு விரோதமான படங்களும், தேவையின்றி கொடுஞ்செயல்களை மிகைப்படுத்திக் காட்டுவனவும், சில அரசியல்சார்பான அல்லது ஒரு சாரார் மனத்தைப் புண்படுத்தக்கூடிய படங்களும் தடை செய்யப்படலாம். ஆனால், ஒவ்வொரு படத்திலும் எவ்வளவுக்கு இந்த அம்சங்கள் அடங்கியுள்ளன என்றும், தடை செய்வதற்குப் போதிய நியாயம் இருக்கிறதா என்றும் தீர்மானிப்பது தணிக்கையாளர் கடமை. சிலசமயம் அவர்களது தீர்ப்பு தவருக இருக்கலாம். ஆனல், அதற்காகத் தணிக்கை முறையே அவசியமற்றதுஎன்று சாதித்தல் அறிவுடமையாகாது. ஏனெனில், திரைப்படங்கள் மக்கள் வாழ்வைப் பாதிக்கின்றன என்பதில் ஐயமேயில்லை. உண்மையில் ஆபாசமான படங்களையும், சன்மார்க்கத்துக்கு விரோதமான வகையில் மனிதனைத் தூண்டும் படங்களையும் அனுமதிப்பது சமூகத்தின் ஒழுக்க நிலையையே தாழ்த்துவதற்கு வழிகோலும். ஒருவர் ஒன்றைப் பார்ப்பதோடு நின்றுவிடுவதில்லை. அதைப்பற்றிச் சிந்திக்கிறார், செயலிலும் இறங்குகிறார்.

சில படங்கள் 'வயதுவந்தோர்க்கு மட்டும்' என சிபாரிசு செய்யப்படுகின்றன. ஆனால், இளைஞரும் மாணவரும் அவற்றைப் பார்ப்பதற்குத் தடையொன்றும் இல்லை. ஏனென்றால், பதினாறு வயதுக்கு மேற்பட்டவரெல்லாம் வயதுவந்தவராகிவிடுகிறார்கள். அவர்களுக்கு நன்மை தீமைகளைப் பகுத்துணரக் கூடிய திறன் இருக்குமா என்பது யோசிக்கவேண்டிய விஷயம்.

பக்களுக்கு வழிகாட்டும் பொருட்டுத் திருச்சபையான பல நாடுகளில் ஒருவிதமான தணிக்கை முறையைக் கையாண்டு வருகிறது. எந்தத் திரைப்படத்தையும் தடை செய்யத் திருச்சபைக்கு அதிகாரமில்லை. ஆகவே, அவற்றைத் தரம் பிரித்துக் காட்டி, மக்கள் பார்த்து ரசிக்கத்தக்கவை எவை, விலக்க வேண்டியவை எவை என ஆலோசனை கூறி வருகிறது. இந்த ஆலோசனையை கத்தோலிக்கர் மட்டுமல்ல, பிற மதத்தினரும் மதித்துப் பின்பற்றிவருவதைக் காண்கிறோம். இத்தகைய ஒரு முறை எம் நாட்டிலும் இருக்குமானால் அது தீயவற்றை நாடிப் போகிறவர்களைத் தடை செய்ய முடியாது போனாலும், அறியாமையாற் திண்டாடுபவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.

### பாப்பரசருக்கு கம்யூனிஸ்த ஓவியரின்

## அன்பளிப்பு

சுவர்ச் சித்திரங்கள் மற்றும் பல்வேறு சித்திரங்களிலும் போன்று தனது புரட்சிகரமான அரசியல் நடவடிக்கைகளிலும் பெயர்பெற்ற டேவிட் அல்பாரோ இக்குவெயிர்சோ என்ற மெக்சிக்கோ நாட்டுப் பிரபல கம்யூனிஸ்த ஓவியர்கிறிஸ்துநாதரின் வர்ணந்தீட்டிய அரியதோர் சித்திரப்படம் ஒன்றை வத்திக்கான் கண்காட்சிச்சாலையில் வைக்கும்படியாகப் பரிசுத்த பாப்பரசருக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார்.

இந்தச் சித்திரப்படம் "விசுவாசிகள் மத்தியிலே சமாதானத்தின் கிறிஸ்து ஒருவ"ரைக் காண்பிக்கின்றது, மேலும் அது "அவரின் மனோவேதனையையும், சமாதான செய்தியையும்" காண்பிக்கின்றது. இந்தப்படம் அவருடைய சமய நம்பிக்கையிலும் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறதா? என்று அப்பொழுது அவர் கேட்கப்பட்டார். ஏனெனில் இவருடைய வேலைகள் பல முறையும் குருமாரையும், திருச்சபையையும் விரோதிப்பனவாகும். இவர் அதற்குப் பதிலளித்தபோது, "மானிட வாழ்க்கையின் திருத்தத்திற்காகவே கிறிஸ்துநாதர் போராடினார் என்பதை ஒப்புக்கொள்ளாத கம்யூனிஸ்தர்களே இல்லை" எனக் கூறினர்.

"கிறிஸ்துநாதர் ஒருபெரும் புரட்சியாளராய் இருந்தார். அஞ்ஞான உலகின் துன்புறுத்துதலை எதிர்த்து முதல் முதலாகப் போராடியவர் அவரே. கேட்டு நொந்தவர்கள் பக்கமாகவே எப்போதும் அவர் இருந்துவந்தார்" எனவும் கூறினார்.

### யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க ஆசிரியைகளின்

## வருடாந்த ஞானஒடுக்கம்

மேற்படி ஞான ஒடுக்கம் 1970-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 6-ந் திகதி ஞாயிறு மாலை 5-00 மணிக்கு பண்டத்தரிப்புக் கன்னியர்மடத்தில் (ஞான ஒடுக்க இல்லத்தில்) திவ்வியபூசையுடன் ஆரம்பமாகி, 9-ந் திகதி கருத்தரங்குடன் மாலை 4-00 மணியளவில் நிறைவுபெறும். தயவு செய்து பங்குபற்றுவோர் நேரகாலத்துடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அறிவிக்கவும்.

ஞான ஒடுக்க போதகர்:
வண. எஸ். ஜே. இம்மனுவல் அடிகளார்.

கருத்தரங்கு நடத்துபவர்:
வண, ஜி. ரி, பாலசுந்தரம் அடிகளார்.

கருத்தரங்குப் (9-9-70) பேச்சாளர்:

காலை (1) திருமதி ஆர். எஸ். பாமர், E. O. அவர்கள்
(2) திரு. ஜே. ஜி. அரசரட்ணம்,
இளைப்பாறிய அதிபர்.

மாலை (1) திருமதி எம். சவிரிமுத்து அவர்கள்
(2) பொது நிர்வாகக் கலந்துரையாடலும், நிர்வாக அங்கத்தவர் தெரிவும்.

Mother Provincial

Rev. Mother Superior,
'Retreat House',
Hoy Family Convent,
Pandatha.ippu.

# லத்தறன் உடன்படிக்கையும் விவாகரத்தும்

விவாகரத்து — அதாவது விவாகப்பிரிவையும் விலக்குவதாய் வத்திக்கானுக்கும் இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே அப்போது நடைபெற்ற லத்தறன் உடன்படிக்கையின் ஒரு ஷரத்து(பிரிவு) அரசியல் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அமையும் என்பதை ரோமானிய அப்பீல் நீதிமன்றம் நிலைநிறுத்தியிருக்கின்றது. அங்கே ரோமர்களான தம்பதிகள் இருவர் விவாகரத்துப் பெறுவதற்காக நீதிமன்றத்தில் ஒருவழக்குத் தொடர்ந்தார்கள். இது ஒரு தத்துவத்தை நிரூபிப்பதற்குப் பரீட்சார்த்தமாகத் தொடரப்பட்ட ஒரு வழக்காகும். இதிலே விவாகரத்துப்பெறுமுகமாக அவர்கள் எடுத்தக்காட்டிய நியாயம் யாதெனில், இத்தாலிய அரசாங்கத்துக்கும், வத்திக்கானுக்குமிடையே நடைபெற்ற லத்தறன் உடன்படிக்கையின் அந்த ஷரத்து சட்ட விரோதமானது—முறையற்றது என்பதே.

லத்தறன் உடன்படிக்கையின் 34-வது ஷரத்தானது இத்தாலியிலே விவாகம், விவாகரத்து சம்பந்தமாய்த் திருச்சபைக்கு அதிகாரமளிக்கின்றது. ஆனால், இந்த விவாகரத்துவழக்கிலே வழக்காளிகள் சார்பாக ஏற்படுத்தப்பட்ட நியாயவாதிகளோ இத்தாலிய பிரசைகளின் பிரசாஉரிமைகள் சம்பந்தமாய்க் கட்டளையிடப் பிறநாடு (வத்திக்கான்) ஒன்றுக்கு அனுமதியளிப்பதாலே இத்தாலிய அரசியல் அடிப்படை அமைப்பை இது மீறுகிறதென்று நீடிய நேரம் வாதாடினார்கள். ஆனல், அப்பீல் நீதிமன்றமோ அவர்களுடைய நியாயத்தை ஒப்புக்கொள்ளாது அந்த ஷரத்து அரசியல்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதெனத் தீர்ப்பளித்துள்ளது.

## பிரமாதமான திருயாத்திரை

பிரித்தானிய தேசத்திலிருந்து வருகிற ஐப்பசிமாதம் 23ஆம், 24ஆம் திகதிகளிலே ரோமாபுரிக்கு முன்னில்லாதவிதமாய் மிகப்பிரமாண்டமான ஆகாயப்பிரயாண விமானப்படை ஒன்று யாத்திரிகர்களை ஏற்றிச் செல்லவிருக்கிறது. ஐப்பசிமாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிரித்தானிய வேதசாட்சிகள் நாற்பதின்மருக்கும் புனிதர்பட்டம் அருளப்படும் திருவைபவத்திற்குச் சமுகமளிக்குமுகமாக இந்த விமானங்கள் பிரித்தானியிலும், வேல்சிலுமுள்ள ஆகாயவிமானநிலையங்களிலிருந்து அநேகமாக அத்தேச மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார் அனைவரையும், மற்றும் பலநூற்றுக் கணக்கான யாத்திரிகர்களையும் ரோமாபுரிக்கு ஏற்றிச் செல்லும். அதிமேற்றிராசனங்கள், மேற்றிராசனங்கள், விசாரணைப்பங்குகள், பாடசாலைகள், ஊளப்புகள் ஆதியன பலவும் ஏற்கனவே இந்த விமானங்களில் இடங்களை ஒதுக்கியிருப்பதாலே இந்த யாத்திரை எக்காலத்திலாவது பிரித்தானியிலிருந்து ரோமாபுரிக்கு நடைபெற்ற மகா யாத்திரைகளில் ஒன்றாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திருப்பட்டம் அருளப்படும் நாளுக்கு மறுதினம் ஆங்கில, வேல்ஷ்யாத்திரிகர்கள் அனைவருக்கும் சின்னப்பபாப்பரசர் விசேட பேட்டியருளுவார்.

● எம்மிலே இருக்கும் மூன்று எதிரிகளைப் பற்றி நாம் அறிவதில்லை. கண், காது, வாய். இவை மூன்றும்தான் நம் எதிரிகள். இம் மூன்றையும் அடிமைப்படுத்துபவர்களுக்கு வேறு எதிரிகளே இல்லை,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு. [illegible] அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 970ஆம் ஆண்டு ஆவணி 22ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கத்தோலிக்க பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 நாவிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org